# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2019
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 8

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. இலங்கையின் இறுதிச் சோழமன்னன்
   - அ) இராசராச சோழன் ☐
   - ஆ) இராசேந்திர சோழன் ☐
   - இ) குலோத்துங்க சோழன் ☐
   - ஈ) கரிகாற் சோழன் ☐

2. குதிரை கனைக்கும். அது போல் கிளி
   - அ) கூவும் ☐
   - ஆ) கரையும் ☐
   - இ) பேசும் ☐
   - ஈ) கீச்சிடும் ☐

3. அதியர்மான் ________________ த் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான்.
   - அ) தகடூரை ☐
   - ஆ) மதுரையை ☐
   - இ) காஞ்சியை ☐
   - ஈ) பேரூரை ☐

4. நடனமாடினாள் என்பது
   - அ) அஃறிணை ☐
   - ஆ) எதிர்மறை ☐
   - இ) குறைவினை ☐
   - ஈ) உயர்திணை ☐

5. தமிழீழம் தந்த அன்னை எனப் போற்றப்படுபவர்
   - அ) தெரேசா ☐
   - ஆ) பூபதி ☐
   - இ) மேரிகியூரி ☐
   - ஈ) நைட்டிங்கேல் ☐

6. போர் அவலத்தினால் அனைத்து முகங்களும் ________________ காணப்பட்டன.
   - அ) கழையிழந்து ☐
   - ஆ) கலையிழந்து ☐
   - இ) கணையிழந்து ☐
   - ஈ) களையிழந்து ☐

7. அவன் + அது என்பது

அ) அவனின் ☐ ஆ) அவனாது ☐

இ) அவனது ☐ ஈ) அவன்அது ☐

8. "ஓரகப்பை அன்னம் இலையில் இட ஊர் அடங்கும்."இதில் அன்னம் என்பது

அ) சோறு ☐ ஆ) பிட்டு ☐

இ) இடியப்பம் ☐ ஈ) தோசை ☐

9. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்களில் ஒன்று

அ) முள்ளியவளை ☐ ஆ) பொம்பரிப்பு ☐

இ) பூநகரி ☐ ஈ) கந்தரோடை ☐

10. 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்னும் நூலை எழுதியவர்

அ) சோமசுந்தரப்புலவர் ☐

ஆ) காளமேகப்புலவர் ☐

இ) சின்னத்தம்பிப் புலவர் ☐

ஈ) கல்லடி வேலுப்பிள்ளை ☐

11. வரதன் என்ற இயற்பெயரைக் கொண்டவர்

அ) விபுலாநந்தர் ☐ ஆ) பாவேந்தர் ☐

ஆ) பாரதியார் ☐ ஈ) காளமேகப்புலவர் ☐

12. **குறள் :** மனத்தொடு ______________ மொழியின் தவத்தொடு

தானஞ் செய்வாரின் தலை

அ) வாய்மை ☐ ஆ) மேன்மை ☐

இ) பொய்ம்மை ☐ ஈ) நேர்மை ☐

13. **பாடின்றிப் பட்டம் இல்லை** என்ற பழமொழி குறிப்பது

அ) முயற்சியின்றி உயர்ச்சி இல்லை. ☐

ஆ) பட்டம் இல்லையென்றால் பயன் இல்லை. ☐

இ) பாட்டுப் பாடினால் பட்டம் பெறலாம். ☐

ஈ) பட்டம் பெற, படிக்க வேண்டும். ☐

14. இயற்றமிழ் என்பது

அ) பாடலும் உரைநடையும் ☐

ஆ) இசையும் நாடகமும் ☐

இ) இயலும் இசையும் ☐

ஈ) நாடகமும் நடிப்பும் ☐

15. தப்புலன் புகலிடம் வழங்க மறுத்ததால், இராசசிம்மன் __________ நாட்டிற்குத் திரும்பிச் சென்றான்.

அ) சோழ ☐ ஆ) சேர ☐

இ) பாண்டிய ☐ ஈ) ஈழ ☐

16. புதிதாகச் செய்த தேரை முதன்முதலாக, பலர் அறிய ஓட விடுதல்

அ) அரங்கேற்றம் ☐ ஆ) பட்டிமன்றம் ☐

இ) வெள்ளோட்டம் ☐ ஈ) ஓத்திகை ☐

17. பண்டாரவன்னியன் __________ ஆண்டுகள் மறைந்திருந்து படை திரட்டினான்.

அ) ஐந்து ☐ ஆ) எட்டு ☐

இ) ஆறு ☐ ஈ) ஏழு ☐

18. கடலறிவு என்ற உவமை அணியை, உருவக அணியாக மாற்றினால்

அ) கடலும் அறிவும் ஆ) அறிவுக் கடல்

இ) கடல் போன்ற அறிவு ஈ) கடல் அறிவு

19. இறந்தகாலப் பெயரெச்சத்துக்கு எடுத்துக்காட்டு

அ) படித்தான் ஆ) படிக்கும்

இ) படித்த ஈ) படிக்கின்ற

20. **மும்முடிச்சோழ மண்டலம்** என அழைக்கப்பட்ட நாடு

அ) இந்தியா ஆ) இலங்கை

இ) சிங்கப்பூர் ஈ) பர்மா

21. நீரில் மலரும் மலர்

அ) அல்லி ஆ) செவ்வந்தி

இ) செவ்வரத்தை ஈ) மல்லிகை

22. இடையர் ____________ நிலத்துக்குரிய மக்கள்.

அ) குறிஞ்சி ஆ) முல்லை

இ) மருதம் ஈ) பாலை

23. வைதல் என்பது

அ) சிரித்தல் ஆ) ஏசுதல்

இ) பாடுதல் ஈ) அழுதல்

24. நாட்டைக் காப்பது மக்கள் கடமை. இதில் வந்துள்ள வேற்றுமை உருபு

அ) இல் ஆ) கு

இ) ஐ ஈ) ஆல்

25. நாதகுத்தனார் எழுதிய நூல்

அ) மணிமேகலை ☐ ஆ) வளையாபதி ☐

இ) சீவகசிந்தாமணி ☐ ஈ) குண்டலகேசி ☐

26. இயற்கையின் இன்பக் கூத்திற்கெல்லாம் காரணமானவன்

அ) கதிரவன் ☐ ஆ) மதி ☐

இ) மாந்தன் ☐ ஈ) விலங்கு ☐

27. "ஊரான ஊர் இழந்தேன் ஒத்தப் பனைத் தோப்பிழந்தேன்" என்று மனம் நொந்தவர்

அ) முதலாளி ☐ ஆ) கண்காணி ☐

இ) தோட்டத்துரை ☐ ஈ) தொழிலாளி ☐

28. குழந்தை தவழ்ந்து வந்தது. இதில் தவழ்ந்து என்பது

அ) பெயரெச்சம் ☐ ஆ) வினையெச்சம் ☐

இ) தன்வினை ☐ ஈ) வினைமுற்று ☐

29. முல்லைத்தீவில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த கோட்டையை பண்டாரவன்னியன் அழித்த ஆண்டு

அ) 1619 ☐ ஆ) 1803 ☐

இ) 1833 ☐ ஈ) 1815 ☐

30. தலை கவிழ்தல் என்பது

அ) மரபுத்தொடர் ☐ ஆ) இணைமொழி ☐

இ) உவமையணி ☐ ஈ) உருவகஅணி ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

பாரிசு நகரத்தின் வரலாற்றுப் புகழ் மிக்க நொற்றடாம் கிருத்தவக் கோவில் தீக்கிரையான நிகழ்வு பிரான்சின் வரலாற்றில் பெருந் துன்பவியல் நிகழ்வாகப் பதியப்படுகிறது. பிரெஞ்சுக் குடியரசு தனது வரலாற்று அடையாளங்களை அதிக கவனத்துடன் பாதுகாத்து வந்த போதிலும் இன்று இந்தப் பெருங்கோவிலைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. இக்கோவில் 856 ஆண்டு காலம் பழமை வாய்ந்தது. கி.பி 1760 வரை மன்னர்களின் துணையுடன் அரசியலிலும் பிரெஞ்சு மக்களது வாழ்விலும் செல்வாக்குப் பெற்ற ஓர் அமைப்பாக இருந்தது. ஆண்டொன்றிற்கு 12 மில்லியன் மக்கள் இக்கோவிலுக்கு வந்து போகின்றார்கள். நொற்றடாம் கோவில் பற்றியெரிவதைக் கண்டு உலகமே பதறியது. இதைக் காணும் போது எமக்கும் எமது யாழ்நூலகம் எரியூட்டப்பட்ட நினைவுகளே வந்து போகின்றன. இவை இரண்டும் வரலாற்று நினைவுகளாகவே பதியப்பட்டிருக்கின்றன.

1. பிரான்சில் அண்மையில் நடந்த துன்பவியல் நிகழ்வு எது?

_______________________________________________

_______________________________________________

2. இப்பேரழிவுக்கு ஒப்பிடப்பட்ட எமது வரலாற்று அடையாளம் எது?

_______________________________________________

_______________________________________________

3. முன்னர் இக்கோவில் எவற்றினது செல்வாக்கைப் பெற்றிருந்தது?

_______________________________________________

_______________________________________________

4. பிரெஞ்சுக் குடியரசு எவற்றைப் பாதுகாத்து வந்தது?

_______________________________________________

_______________________________________________

5. இக்கோவில் எத்தனை ஆண்டு காலம் பழமை வாய்ந்தது?

_______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. நட்பு என்ற அதிகாரத்தில் உமக்குத் தெரிந்த குறள் ஒன்றை எழுதுக.

2. நெடுமான் அஞ்சி ஔவையாரை யாரிடம் தூதாக அனுப்பினான்? அவனுக்கு அதியர்மான் எனப்பெயர் வரக் காரணம் என்ன ?

3. பண்டாரவன்னியனுக்கு உள்ள வரலாற்றுச் சிறப்பு என்ன ?

4. இலக்கண நூல்களுள் மிகப்பழமையான நூல் எது? அது எவ்வாறு பாராட்டுப் பெறுகிறது?

5. 'என் தமிழர் மூதாதை; என் தமிழர் பெருமான்' எனப்படுபவர் யார்?

6. இராசேந்திரசோழன் எவற்றைக் கைப்பற்றுவதற்காக இலங்கை மீது படையெடுத்தான்?

7. காளமேகப்புலவர் யாரிடம் உணவு கேட்டார்? அவருடைய சினத்துக்கான காரணம் யாது ?

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

# உதவுவோம்

| மக்களுக்கும் | பேணியவர் | காட்டிய | செய்யும் | போற்றி |
|---|---|---|---|---|

ஆதரவு அற்றோருக்கு உதவுதலே நாம்
ஆண்டவனுக்குச் ______________ சேவையென
வாழ்ந்து காட்டிய அன்னை தெரேசாவை
வாயாரப் ______________ நாம் பாடிடுவோம் !

தொண்டின் உருவாய்த் துலங்கியவர் அவர்
தொழுநோய் கொண்டோரையும் ______________
வாழும் வழியற்ற ______________ அவர் நல்
வாழ்வு கொடுத்து உதவியவர் !

அன்னை தெரேசாவை நினைத்திடுவோம்
அவர் ஆற்றிய பணியைப் போற்றிடுவோம்
நன்றியுடன் அவர் ______________ வழிகளில்
நாமும் பணிசெய்ய முயன்றிடுவோம் !

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. முன்னிலை ஒருமை ஏவல் வினையைக் குறிக்கும் சொல்லியங்கள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

2. அ ) பின்வருவனவற்றின் இளமைப் பெயர்களை எழுதுக.

தென்னை ______________

நெல் ______________

பனை ______________

ஆ ) பின்வருவனவற்றின் ஒலிக்குறிப்புச் சொற்களை எழுதுக.

ஆந்தை ______________

கரடி ______________

மயில் ______________

3. பின்வரும் சொல்லியங்களில் உள்ள ஆகுபெயர்களை இனங்கண்டு எழுதுக.

தமிழீழம் போரினால் அல்லற்படுகிறது. ______________

கார்த்திகை பூத்துக் குலுங்கியது. ______________

தலைக்கு நூறு ஈரோ கொடு . ______________

4. அ ) கீழ்வரும் சொற்களின் எதிர்ப்பொருளை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| சிற்றூர் | ______________ | உறக்கம் | ______________ |
| இன்சொல் | ______________ | காலை | ______________ |
| உயர்வு | ______________ | இறப்பு | ______________ |

5. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

இணைமொழி ______________________

உவமைத்தொடர் ______________________

புள்ளிகள் 15

6) **பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நாம் எமது தாய்நாட்டை மறக்கக்கூடாது. நாம் எமது தாய்நாட்டைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். அங்கு தான் எமது தாய், தந்தையர் பிறந்தவர்கள். அங்கு அவர்கள் எப்போதும் எமது தாய்மொழியில் பேசினர். நாம் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் தமிழில் பேசிப் பழக வேண்டும். நாம் தமிழைத் தமிழ்ப் பள்ளிகளில் படிக்க வேண்டும். நாம் தமிழ்மொழியில் நிறைந்த அறிவைப் பெற வேண்டும். அப்போது தான் தமிழராய் வாழ முடியும்.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

## ✸ காளமேகப்புலவர்

## ✸ உமது வாழிடமொழிப்பள்ளி

- படிக்கும் பள்ளி, வகுப்புநிலை, பாடங்கள்
- வாழிடமொழிப் பள்ளி பற்றி நீர் அறிந்தவை ( மாணவர்கள், ஆசிரியர்கள்.... )
- வாழிடமொழிப்பள்ளியில் கற்று நீர் என்னவாக வர விரும்புகின்றீர்.

## ✸ பெற்றோர்

- உமது பெற்றோர் பற்றிய அறிமுகம்
- பெற்றோர் உம்மிடம் காட்டும் அக்கறை
- நீர் பெற்றோரிடம் காட்டும் அக்கறையும் செய்யும் உதவிகளும்
- முதுமைக்காலத்தில் பெற்றோருக்கு நீர் செய்ய வேண்டியவை

புள்ளிகள் 20